உ

ஸ்ரீ அம்பிகை துணை.

திருமருகல்

ஸ்ரீ வண்டுவார் குழலியம்மை

தோத்திரப் பாமாலை.



நூலாசிரியர்.

ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள்.

இந்நூல்.

திருமருகல்

மு. சாமிநாத முதலியார் அவர்கள்

வெளியிடப்பெற்றது.

உரிமை :

நூலாசிரியருடையது. 1969. இதன் விலை 0—50

உ

சிவமயம்.

முகவுரை.

பூவுலகில் பரமேஸ்வரனல் சிருஷ்டிக்கப்பட்ட மூவகைச் சாதியாய் நால்வகைப் பிறப்பாய் எழுவகை தோற்றமாய் எண்பத்து நான்கு லட்ச யோனிபேதமான சீவர்களில் ஓர் அறிவு முதல் ஆரறிவுவரையுள்ளதில் ஆரறிவுள்ள மக்கள் உயர்ந்தவராவர் இவர்கள் யாவரும் சுகத்திற்குக் காரணமான தாரபுத்ர தனாதிகளை தேடுவதும் துக்கத்திற்குக் காரணமான சோரவியாக்ர சர்ப்பாதிகளை நீக்கவும் ஆன முயற்சி செய்கின்றார்கள். இதில் சுகசாதனங்களைத்தேடும் போதும் வைத்தனுபவிக்கும் போதும் கர்ம வசத்தால் நீங்கும் போதும் துன்பமேயல்லாமல் சுகமென நினைத்தல் அவிவேகமேயாம் அன்றியும் தேகத்தோடு கூடியிருப்போர் யாராயிருந்தாலும் துக்கசாதனம் முற்றும் நீக்குவது கூடாதாம் ஆனால் எல்லாம் வல்ல பரமேஸ்வரன்மாத்திரம் எவர்க்கும் சுகசாதனமானன். அழியாத சுகமாயிருந்தான் துக்கசாதனமாக இல்லை மேலும் முத்திசுகத்தை மறந்த. சீவர்களையும் சுழுத்தியில் பிரமானந்தம் அனுபவிக்கும்படிசெய்யும் கருணை வள்ளல் இதைப் புண்ணியவான்களான மெய்யன்பர்கள் பல்வேறு சமயங்களில் ஈசுவரனை தாய் தந்தை குழந்தை நாயகன் நண்பன் முதலான பல்வேறுபாவனையாக வழிபட்டு இம்மையில் துக்கம் நீங்கிய சுகமும் மறுமையில் பிறந்திறக்காத பேரின்ப முத்தியும் பெற்றதை விவேகத்தால் நோக்க நன்கு புலனும் ஆனதால் ஈசுவரனைத்தாயாக வழிபாடு செய்வது எளியசாதனமாகும் அன்றியும் எனது கனவில் திருவருளோடும் தெரிசனம் தந்தவளும் மேலும் என்னுள்ளிருந்து பாடும்படி தூண்டியவளும் சோழவளநாட்டில் திருச்செங்காட்டங்குடி திருக்கண்ணபுரம் திருப்புகலூர் ஸ்ரீசாத்தமங்கை முதலான பல புண்ணியக்ஷேத்திரங்கள்புடைசூழப்பெற்றதும் சம்பந்தர் அப்பர் என்னும் சமயகுரவரால் தேவாரப்பண் பாடப்பெற்றதும் ஆன திருமருகலில் எழுந்தருளியிருக்கும்

ரத்னபுரீஸ்வரர் (மாணிக்கவண்ணர்) இடதுபாகம்பெற்ற வண்டுவார் குழலியம்மன்பேரில் தோத்திரப்பாமாலைப்பாடி மகிழப்பெற்றேன். இதைக்கண்ட கேட்டபலர் பாடல் 102யும் கையெழுத்தால் எழுதிபடிக்கத்தொடங்கினர். அவர்களில் ஒருவர் திருமருகல் மு. சாமிநாத முதலியார் அவர்களாகும் அவர்களே பொருளுதவி அச்சுவாகனம் ஏற்றி பல மெய்யன்பர்களுக்கு கொடுக்கவிருப்பம்தெரிவித்ததாலும் பல வித்வான்களும் பல அன்பர்களும் அச்சிடவேண்டுமெனக் கேட்டுக்கொண்டதற்கிணங்கி இத்தோத்திரப்பாமாலையை அச்சியற்றி வெளியிடுகின்றேன். மேலும் சொல்லாமற் செய்வர் பெரியர் என்பதை நிலைநாட்டிய முதலியார் அவர்களுக்கு எல்லாம் வல்ல அகிலலோக நாயகியாகிய வண்டுவார்குழலியம்மன் திருவருளால் இம்மை மறுமை இன்பங்கள்பெற்று மகிழும்படியாக இறைவியைப்பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

பிரம்மானந்தம்,

வேணும் சற்குருநாதன் துணை.

3/13

உ

சிவமயம்.

ஸ்ரீல-ஸ்ரீ நிஜானந்த பிர்மேந்திர சரஸ்வதி அவதூத (ஸ்ரீ காசி) சுவாமிகள் அருளிச்செய்த

சாற்றுக்கவி.

கட்டளைக் கலித்துறை.

உலகங்கள் யாவுக்கு மோங்குபா தான வொருபொருளாய்
இலகுந் திருமரு கல்வண்டு வார்குழ லெம்மிறைவி
மலர்ப்பதம் சூடுநன் மாலையொன் றன்பின் மகிழ்ந்துரைத்
[தான்
பலரும், புகழ்ந்துகொண் டாடப்ர மானந்த பாவலனே.

ஸ்ரீ இராமேஸ்வரம், சிவாஸ்ரமம், இளையான்குடி
வேதாந்தமடம், இவைகளின் ஸ்தாபகரும்,
தலைவருமான,

ஸ்ரீ சிவானந்த ஞானதேசிக சுவாமிகள்

அவர்கள் இயற்றிய

சாற்றுக்கவிகள்.

வண்டுவார் கூந்தலுடை மாதேவி தன்மீது
அண்டருரை பாமாலை ஆற்றினர்--கொண்டகுரு
பொன்னம் பலர்பதமே போதந் தருமென்று
பன்னுபிர மானந்தர் பார். 1

கண்டோ கனிரசமோ கற்பகப்பூந் தேன்றானோ
அண்டர் அமுதோ அனைத்துமோ—எண்டருமிப்
பாமாலை என்றுதினம் பாடிடுவோர் பற்றறுத்துத்
தாமாயும் முத்திபெறும் தான். 2.

உ

சிவமயம்.

சிறப்புப் பாயிரம்.

இஃது.

ரிஷிகேஸம் பிரஹ்ம ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி மகாராஜ் அவர்களின் மாணவராகிய ஸ்ரீ சுவாமி நித்தியானந்த ஸரஸ்வதிகள்

அன்புடன் நல்கியது.

பதினான்குசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருவளர் மரையோ டல்லிசெங் குவளை
 திகழ்ந்துசூழ் நதிபல பொதும்பர்
சிறந்துவிண் பஞ்ச தருவினைத் தாழ்த்தும்
 செழிஇய சீர்திரு மருகல்
உருவளர் தெய்வ நகர்மிளிர் தளிவாழ்
 உமைசிவை வண்டுவார் குழலி
ஓமயச் செல்வி யுயர்திரு வடிக்கு
 உயர்தமி ழலங்கல்வேய்ந் தனனே!
பெருவளஞ் சுரக்கும் சீர்ப்புதூர் நகர்வாழ்
 பேர்பொனம் பலவத்து வைதப்
பெட்புயர் தவத்தோர் திருவடி போற்றும்
 பெருந்தகை பிரஹ்மவா னந்த
நிருமல நிபுணன் நிலமிசை யுயிர்கள்
 நீடிய பவப்பிணி களைந்து
நிகரிலாச் சாட்சாத் காரமெய் திடவே
 நிகழ்த்தினு னென்சொல்வேன் அம்மா!

ஓம் தத் சத் பரப்பிரஹ்மணே நம:

சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்ருகிய திருமருகலில் எழுந்தருளி விளங்கும்

வண்டுவார் குழலியம்மை தோத்திரப்பாமாலை.

காப்பு.

மூவர்க்கும் வானவர்க்கும் முன்னின் றிடரகற்றும்
தேவன் விநாயகன்ருள் சென்றிறைஞ்சும் யாவர்க்கும்
கொண்ட வினைமுடிப்பான் கோளகற்றி யாட்கொள்வான்
தண்டலற மெய்ப்பதத்தைத் தந்து.

நூல்.

எழுசீராசிரிய விருத்தம்.

திருவருள் பெற்ருேர் தினமுனைப் பாடித்
தீதறும் இன்பமுற் றிருக்க
மருவரும் பிறவி வாய்த்ததென் றுணரேன்
மறைப்பொருள் மதித்துணர்ந் தறியேன்
கருவடைந் துன்னைக் கனவிலுங் கருதாக்
கடையனுன் பாடுமா றுணர்ந்து
மருவிய வெனையாள் மருகல்வாழ் அரசே
வண்டுவார் குழலியெந் தாயே. 1

பாடுவான் புகளிப் பாவலன் எனநீ
பால்கொடுத் தோசைதந் தனையோ
கூடுவான் எனநீ கூடன்மன் மகளாய்க்
குவலயத் தாண்டிருந் தனையோ
தேடுவான் எனநீ சிந்தையுற் றனையோ
தேவிநின் திருவருள் இன்றேல்

வாடுவான் என்றுள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 2

சென்னிதாழ்ந் துன்னைத் தினம்பணி வார்க்குச்
செல்வமும் மனைவியுஞ் சேயும்
மன்னிய வாழ்வும் மாசிலாப் புகழும்
மறுமையில் முத்தியும் அளிப்பாய்
உன்னியே உன்னை யொருகணம் நினையா
உலுத்தனேற் கிரங்குநாள் உளதோ
வன்னிசேர் கோயில் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 3

ஆலவாய் முதலாம் அறுபதும் நான்கும்
அருளிடம் அரசதாய்க் கொண்டு
சீலமாய்ப் போற்றும் சிவருக் கருளும்
திருவுளம் தீனனுக் கிரங்கிக்
காலமென் றறிந்து கடையனுன் உய்யாக்
கருத்தினில் நீயதாம் என்றே
மாலற அருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 4

தாழ்விலா யோகச் சதுரரும் உன்றன்
றுளிணை தஞ்சமென் றடைந்தே
ஊழ்வினை யொழித்தார் உயர்பதம் உற்றார்
உணர்விலேன் உய்யுமா றுணரேன்
ஏழ்பவந் துடைக்கும் இறைவிநின் னருளால்
இன்பமெய் யுணர்வடைந் திருக்கும்
வாழ்வெனக் கருளாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 5

பாளையாய் மண்ணுண் டுவாமதி யழைத்துப்
பலனறக் கழிந்தநாள் பலவாம்
காளையாய் மானார் கலவியில் ஏங்கிக்
கதியறக் கழிந்தநாள் பலவாம்
வேளையோ நமன்நாள் மெய்தளர்ந் திடுநாள்
மெய்யுணர் வளித்தருள் புரிவாய்
வாளைமீன் வயல்சூழ் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 6

இல்லறம் பெரிதென் றெடுத்துரைத் திடுவேன்
இயற்றிலேன் இன்பமாந் துறவு
நல்லதென் றுரைப்பேன் நடந்திலேன் உய்ய
நான்மறை ஞானமெய்ம் மொழியால்
இல்லதே மாயை யியற்றுவ தில்லை
இன்பமெய் யறிவுநீ யென்றே
வல்லவள் அருள்நீ மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 7

நெஞ்சமும் புலனும் நேர்முகம் ஆகி
நேர்ந்தபொய்ப் பொருளிலே சென்று
நஞ்செனும் விடயம் நல்லமு தாக்கி
நரகமே நல்குமென் றஞ்சித்
தஞ்சமென் றடைந்தேன் தயவினாற் ரூபந்
தனித்துமெய் யுணர்வளித் தாள்வாய்
மஞ்சுலாம் பொழில்சூழ் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 8

சிந்தைநெக் குருகிச் சிலிர்த்துமெய்ம் மறந்து
சீவதற் போதமற் றன்பாற்

சிந்தநீர் கண்கள் திருவருள் உடையார்
சிந்தையிற் குடியிருந் தருள்வாய்
சிந்தியேன் எனினும் திருடருன் னருளாற்
சிவனடிக் கன்பராம் திறம்போல்
வந்தெனக் கருள்வை மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 9

இல்லையென் றிரப்போர்க் கீந்திலன் அன்பால்
இன்சொலும் இசைத்திலேன் எங்கும்
எல்லையற் றிருக்கும் இன்பமாம் உருவை
எண்ணிநெஞ் சசைவற அறியேன்
தில்லையே முதலாம் திருப்பதி யடையேன்
திருவெழுத் தைந்துரைத் துய்யேன்
வல்லைநீ யருள்செய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 10

பூவினால் அலங்கல் புனைந்துவந் தணியும்
புண்ணியர்க் கிரங்கிநீ யருள்வாய்
பாவினால் அலங்கல் பாடிவந் தணியும்
பாவலர்க் கருள்வைநீ யுருகி
நாவினாற் பாடும் நயமிலா நாயேன்
நானிலத் துய்யுமா றருள்வாய்
வாவிசூழ்ந் திலங்கும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 11

முன்னைநற் சுருதி மூவரே முதலோர்
முழுதுணர்ந் துரைத்திடா முதலே
தன்னையுற் றுணர்ந்தோர் தம்முரு வாகித்
தற்பதந் தந்தருள் புரிவாய்

★ திருடரைச் சிவனடியார்களாகச்செய்த வீரசைவ பெரியார் வசவதேவர் வரலாறு.

என்னையுற் றறியேன் ஏதுமற் றறியேன்
ஏழையேற் கிரங்குநாள் உளதோ
மன்னர்சூழ்ந் தேத்தும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 12

தூக்கமே காலன் தூதறு சுவையாம்
தோகையர் மோகநேர் நமனும்
காக்குநீ யருளால் கடும்பகைப் புலனும்
கருத்தறுந் துயிலுநீ யொழிப்பாய்
ஆக்கலே முதலாம் ஐந்தொழிற் கரசே!
அன்னையே! அகிலநா யகியே!
வாக்கினில் இருந்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 13

உள்ளமே மாயைக் குறுதுணை யாகும்
உணருமிப் புலன்களே தன்னை
மெள்ளவே மறக்கும் வேளைபார்த் திருக்கும்
மெய்யுணர் வெனக்களித் தருளால்
கள்ளமாம் புலன்கள் கலக்கிடா முன்னம்
காரிருள் தொலைத்தருள் புரிவாய்
வள்ளலென் றடைந்தேன் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 14

முத்திநேர் விலக்காம் முடமேழ் பூமி
முதல்விநீ முன்னறத் தள்ளி
சித்துரு வாகும் சிறந்தவேழ் பூமி
சிந்தையிற் றீதற விளக்கி
அத்விதம் ஒன்றில் அறிவனேல் பேதம்
அவன்எமன் பயத்துறும் ஒன்றே
வத்துவென் றருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 15

ஊட்டுவான் ஈசன் உண்பவன் சிவன்
உபாதிகள் நீக்கவே நின்றும்
நாட்டுளோர் அரசன் நகர்துறந் தேகில்
நாடுமெய் வேறிலா ததுபோல்
தீட்டுமெய்ஞ் ஞானத் தினகரன் உதித்தாற்
றீர்ந்திருள் சிவனுயிர் ஒன்றும்
வாட்டம தொழித்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 16

பசித்துயர் போனாற் பாவையர் துயர்மேல்
பல்பொருள் சேர்த்தலாற் றுயராம்
அசித்துடல் நோயால் அருந்துயர் இறப்பால்
ஆந்துயர்க் களவிலை யினிமேல்
நசித்துயிர் போனால் நாடிடம் அறியேன்
நமன்வர நடுக்குறும் உயிர்தான்
வசித்துவப் பதந்தா மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 17

காமமாம் பகையைக் கடிந்துமெய்ஞ் ஞானக்
கதிரினால் காரிருள் தொலைத்தால்
சேமமாம் உலகிற் செல்கதி கிட்டும்
செயலெலாம் சேர்பயன் உடைத்தாம்
போமனத் துயரம் புன்பிறப் பொழியும்
போதம்நீ கொடுத்தருள் ஈசன்
வாமமூற் றிருக்கும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 18

கமலையிற் பிறக்கக் காசியில் இறக்கக்
கண்டிடத் தில்லையில் அருணை
அமலமாய் நினைக்க அருங்கதி யென்பர்
அருளினால் யானென தற்றே

அமரநின் பதத்தில் அரைக்கணம் நெஞ்சம்
அசைவற முத்தியாம் நாயேன்
மமதைதீர்த் தெனையாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 19

பெண்குரல் கேட்ட சிரபுரப் புலவன்
பேணிவந் தருளினுற் பாடப்
பண்புற விடம்போய்ப் பாவையின் பதியாம்
பதியினில் விடத்தினல் இறவார்
புண்பட விச்சைப் புயங்கனுற் கடித்துப்
பொன்றிடா முன்னருள் புரிவாய்
வண்புகழ் படைத்த மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 20

இம்பரில் சாங்கால் எண்ணிய ததுதான்
எய்திடும் என்றிடும் மறைகள்
வெம்புறும் மூப்பால் மெலிவுறும் நோயால்
மெய்விடும் போதுநான் உன்னைக்
கும்பிட வறியேன் குரைகழல் நினையேன்
கூடவந் துணர்வளித் தருள்வாய்
வம்புலாம் பொழில்சூழ் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 21

பதிபசு பாசம் பகர்ந்தமுப் பொருளும்
பரமசத் தென்றிடின் மூன்றுல்
பதிபரிச் சேதம் படுமென வறியார்
பகர்வரேற் பழமறை சகியா
நதித்திரைக் குமிழி நல்கினும் ஒன்றும்
நனவுறுங் கனவுபோல் முத்தி
வதிவதென் றருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 22

நலமறிந் துயிர்க்கு நன்மைசெய் துய்யேன்
நன்மைபோற் றீங்குசெய் நாயேன்
சலமுறும் பிறவி தவிர்ப்பதற் கறியேன்
சமர்த்தனாய்ப் பிறர்க்கெடுத் துரைப்பேன்
திலமள வுண்மை தினமுணர்ந் துய்யேன்
தீனனுக் கிரங்குநா ளுளதோ
மலர்மகள் போற்றும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 23

துங்கநான் மறைகள் தொடர்ந்திடா அடிகள்
தோய்ந்திடப் பார்தனில் நடந்தாய்
நங்கையாய்க் கவிஞன் நலமறிந் தடிசில்
நல்கிநீ யாடையும் துவைத்தாய்
சங்கரன் பாடும் சௌந்தர லகிரி
சாற்றிடத் தமிழதில் வைத்தாய்
மங்கலம் ஒலிக்கும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 24

பிள்ளையென் றிரங்கும் பெற்றதாய் போலப்
பேதைமை தீர்த்தருள் புரிவாய்
கிள்ளைமேன் மாடங் கீதமே பாடும்
கீர்த்திசேர் மதுரைமா நகரிற்
பிள்ளைபந் தமிழைக் குருபரன் பாடப்
பிள்ளையாய் முத்துமா மாலை
வள்ளலாய் வழங்கும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 25

கம்பனுங் காள மேகமும் அருளால்
கவிஞராற் கண்டுகண் டுவக்க
அம்புவிக் கரியின் னருங்கதை யளித்தார்
அரிகண்டம் முதலன வறைந்தார்

நம்பினேன் அருளை நடுக்கடற் பறவை
நாடினும் கப்பலே கதிபோல்
வம்பொழித் தெனையாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 26

மந்திரம் அறியேன் மணிமருந் தறியேன்
மயலுறும் சாலமும் அறியேன்
சொந்தமொன் றறியேன் சோதிடம் அறியேன்
சோர்விடத் திளைப்பற வறியேன்
சிந்தனைக் கெட்டாத் திருவருள் சுரந்து
தீதருந் தீனனும் போற்றும்
வந்தனைக் கிரங்காய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 27

இனத்தினால் இடையன் இயற்கையோ வுச்சி
யிருந்தடி வெட்டுமோர் இயல்போன்
மனத்தினால் உகந்து மனைவிதன் கையால்
மாவிருந் தளித்திட வறியான்
உனத்தகும் உன்னை யுணர்ந்தருள் பெற்றான்
ஒருதனிப் புலவனென் றுற்றான்
மனத்துகந் தருள்வை மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 28

கண்டுனை யறியார் கருத்தினில் இருவர்
கடவுளுண் டில்லென வுரைத்தல்
உண்டெனும் அவரும் இல்லெனும் அவரும்
ஒப்பென வுரைத்திடிற் பழுதோ
தொண்டனாய் அடியார் தொடர்பிலா நாயேன்
துணையடி யடைந்தனன் அருள்வாய்
வண்டொலி பொழில்சூழ் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 29

புலன்களை வென்றோன் புகலரும் வீரன்
புசித்திடல் ஏங்கிடாப் புசிப்பாம்
நலன்பெறும் அறிவு நம்பிரான் ஒருவன்
நலிவறக் கற்றலே கல்வி
புலமுறநற் கல்வி புசித்திடல் வீரம்
புலையனேற் கருளுநாள் உளதோ
வலம்புரி தவழும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 30

சொன்மலர் வானிற் சுத்தியில் வெள்ளி
துணைமதி மலடிசேய் பேய்த்தேர்
வன்கயிற் றரவு வான்கரு நிறம்போல்
வன்னியில் நீரெனப் பொய்யாம்
பன்னிடு முலகம் பரத்தினில் இல்லை
பகர்வரேல் உணர்விலோர் என்றே
மன்னுணர் வளித்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 31

ஒருபரம் பொருளின் உணர்விழந் தெளியேன்
ஊழிதோ றுற்பவக் கடலிற்
திருவரு ளின்றித் திரிந்தநாள் பலவாந்
தேவிநின் னருளினுன் மனித
உருவடைந் துன்னை யுணர்ந்திடா நாயேன்
உணர்வடைந் துய்யுநா ளுளதோ
மருவினோர்க் கருளும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 32

தோற்றுயிர் அமிழ்ந்த பிறப்பெனும் ஆற்றிற்
றொடர்கரை மானுடப் பிறப்பாம்
போற்றுடல் புரியட் டகவுடல் சீவன்
பொருந்துபத் தாமென அருளால்

ஆற்றினிற் பதிகன் அறிவினுற் பதின்மர்
அறிவுபோல் அறிவுற மயலே
மாற்றிநீ யெனையாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 33

வேதமெய்ப் பொருளை மெய்த்தவர் முன்னுள்
வேறுவே ருகவே விதித்தார்
சாதனத் தவர்க்கே சாற்றினர் ஞானந்
தாதருக் குரைத்தனர் பத்தி
தீதறக் கன்மம் தெளிவிலோர்க் குரைத்தார்
தீயனேன் மூன்றினும் உய்யேன்
வாதறப் பதந்தா மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 34

ஆளநா டசுரன் அமரர்நா டழிய
அமரரும் மூவரும் ஏத்த
ஆளநா டமரர் அசுரர்கோன் ஒழிய
அறுமுகர்க் கருளினை யருள்வேல்
மீளவென் பிறப்பு விதியிலேற் கருள்வாய்
மிளிருமெய்ஞ் ஞானமாம் வேலால்
மாளவென் அவித்தை மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 35

வாசனை மனம்போய் வாய்த்தமெய்ஞ் ஞான
வாழ்வுமெய் யின்பவீ டளிக்கும்
வாசனை மனம்போய் மரித்திடா ஞானம்
வரவிருப் பின்றிவீ டளிக்கும்
வாசனை யறுமேல் மனமறும் உணர்வும்
வாய்த்திடும் மதியிலேன் றனக்கு
வாசனை யழித்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 36

வாதமிட் டலைக்கும் வாதிகள் சமயம்
வாய்மையும் உயர்வெனில் மானம்
வேதமே யென்னில் வேற்றுமை யேதோ
வேறெனல் வாதிகள் கூற்றும்
பேதமேல் அனைத்தும் பேரெழிந் தழியும்
பேதையேன் மனத்தினிற் பேத
வாதம தொழித்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 37

முக்குண மனத்தில் மோகமுந் தொழிலும்
முழுதுணர் விருத்தலால் உயிரில்
இக்குணத் தொழிலும் ஏதுமற் றவத்தை
யின்பமெய் யறிவெனக் காட்டித்
திக்கிலேன் உய்யத்திருவருள் புரிவாய்
தேவிநின் னருளினாற் காக்கும்
மக்களில் ஒருவன் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 38

அன்பினால் மொழியும் அடியவர் மொழியே
ஆரண மொழியெனக் காட்ட
முன்பபி ராமி பட்டருக் கரசர்
முன்குழை முழுமதி யாக்கி
இன்பமே யளிக்கும் இறைவி நின்னருளால்
ஏழையேன் இயற்கை முக்குறும்பாம்
வன்பகை யழித்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே 39

நான்மறைச் சிரத்தும் ஞானிகள் உளத்தும்
நல்லறத் தவத்திலும் இருப்பாய்
ஊன்மறந் துன்னை ஒருகணம் நினையா
உணர்விலிக் கிரங்குநாள் உளதோ

தான் மறந்திடினும் சகலமுங் காக்குந்
தாயினின் றயைமறந் திடுமோ
வான்முறை வழங்கும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 40

தினமுடல் நாளும் திறமுல கென்னுந்
தீதற முத்தியென் றுரைப்பார்
தனம்விடும் லோபன் தாய்விடும் சேயைத்
தன்னுடல் உயிர்விடும் கோபன்
சினம்விடும் காமன் சீலனும் எனினும்
செகமுடல் மறந்திலன் மறக்கும்
மனமெனக் கருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 41

தீர்த்தம தனைத்தும் திருத்தமாய்ப் படிந்து
திருத்தலந் தேடிவந் துன்றன்
கீர்த்தியைப் பரவிக் கேடறப் பூமிக்
கிரிவலம் வரமலம் ஒழித்துள்
தீர்த்தம துற்றால் திருவருள் ஞானத்
தீர்த்தமே பிறப்பறும் என்றே
வார்த்தையெற் கருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 42

கசையுடன் றேர்மேற் கண்ணனாய் விசயன்
கார்மயல் தீர்த்தநின் னருள்போல்
நசையற வுலகில் இராமனாய் வசிட்டன்
நவின்றிடக் கேட்டநின் னலம்போல்
விசைமனத் தருளால் விருப்பறுத் தென்னை
வித்தையால் வீடளித் தென்றும்
வசையறுத் தெனையாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 43

ஒலிமுதல் ஐந்தால் உழைமுதல் ஐந்தும்
ஒழியுமொவ் வொன்றினல் என்ருல்
நலியுமிவ் வைந்தும் நரரைவந் துற்ருல்
நசிப்பதி லையமொன் றுண்டோ!
ஒலிமுதல் ஐந்தும் உணர்ந்தென துருவாய்
உணர்வுமெய் யின்பமாய் இருக்கும்
வலியெனக் கருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 44

மனத்துயர் மாற்ற மான்முதல் மூவர்
மாபெரும் படையெலாம் ஏவச்
சினத்தினர் கல்லிற் சிதைந்தபூ வென்னச்
சிதைந்திட யாவரும் மறைந்தார்
மனத்தினை வெல்லும் வகையெனக் குண்டோ
வந்துமெய் யுணர்வினல் அழித்தே
மனத்துயர் மாற்ருய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 45

கோவிலூர் முத்து ராமலிங் கேசன்
குறையினைத் தாயிடங் கூறித்
தேவிநின் கோவில் வாஸ்துசெய் பொருளைத்
தேடிவந் தருளினல் ஈந்து
மேவினேர் கழனி வீடடைந் துய்ய
மெய்ப்பொருள் உணர்த்திமெய்ஞ் ஞான
மாவிருந் தளித்த மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 46

இடம்பொருள் ஏவல் இடரெனக் கருதி
யிருவகைச் சார்வறத் தள்ளித்
திடம்பெறும் ஞானத் தெளிவினை யடையத்
திருவருள் புரியுமெய்க் குருவுக்

குடல்பொருள் ஆவி யுதவிமெய் யுணர்வால்
உய்ந்திடா மடம்புகும் நாயேன்
மடந்தவிர்த் தெனையாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 47

ஊமையும் ஒழிக்கும் உயர்மதி கொடுக்கும்
உன்னருட் கடலிலே படிந்து
பீழையற் றின்பப் பெருங்கடல் மூழ்கிப்
பிறப்பொழித் திடநினைந் திருக்கும்
ஏழையென் றிரங்கி யிணைகழல் தந்தென்
இருவினை யறுத்துணர் வளிப்பாய்
வாழையம் பொழில்சூழ் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 48

தான்பிறப் பொழிக்க தனித்தமெய்த் துறவால்
தவஞ்செய நினைத்திடா நாயேன்
ஊன்பருத் துழல வுண்பொருள் கவர்ந்தே
யுலகெலாந் திரிந்திடா தருளால்
வான்பொருள் உணர்த்தி மாதவர் கூட்டம்
மருவிமெய் யுணர்வளித் தாள்வாய்
வான்பொழின் முகில்சூழ் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 49

அரசனு யுலகை யாளினுந் தெருவில்
ஐயமேற் றுலகெலாம் இகழ்ந்தும்
தரவரும் செல்வி எனைப்பிரிந் திடினும்
தையலார் மோகமுற் றிடினும்
திரவுணர் வளித்துத் திருவருள் புரிந்து
திருவடி தினநினைந் திருக்கும்
வரமெனக் கருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 50

கதியுறும் உயிர்க்குக் களைகணாய்க் காக்குங்
கற்பகம் நீயிருந் தருள
சதியுறுங் கடையர் தலந்தொறும் பொருளைக்
சாந்துநான் கற்பகம் என்றே
விதியிலேன் போற்றல் விலக்கியுன் னருளால்
விரைகழல் அளிக்குநாள் உளதோ
மதிதவழ் மதில்சூழ் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 51

முற்றுணர் வுதித்தால் முக்குறும் பொழியும்
முத்தியாம் இன்பமும் பேரும்
கற்றுணர்ந் தவர்பால் காணுமுக் குறும்பேல்
கனவுபோல் கானலின் நீர்போல்
மற்றவன் விருப்பால் மணாளனைத் தழுவி
மகிழ்வுறும் மங்கையர் போலாம்
மற்றுணர் வளித்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 52

கண்மயல் தீர்ந்து கதிமயல் தீர்ந்து
காசினி யுழல்மயல் தீர்ந்து
மண்மயல் தீர்ந்து மகன்மயல் தீர்ந்து
மாநிதி மயலெலாம் தீர்ந்து
பெண்மயல் தீர்ந்து பிறப்பொழித் திடுநாள்
பேதையேற் குண்டெனில் உரையாய்
வண்புகழ் பரவும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 53

கான்மரத் தியற்றும் கரிமுதற் பொருளைக்
காட்டமென் றறிபவர்க் குண்டோ
ஊன்முதல் உலகாய் உதித்தவிப் பரத்தில்
உருப்பெயர் விடுத்துல குண்டோ

ஊன்மறந் தருளால் உணர்வுமெய் யின்பாய்
உணர்த்துவாய் *மன்னவர்க் கிரங்கி
வான்மணி பொழியும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 54

கொண்டகோ லத்தைக் கொள்வரேல் உவந்து
குவலயச் செயலெலாம் புதிதோ
உண்டவின் பத்தை உண்பரேல் உவப்பால்
உகந்துமண் சோறுணுஞ் சிறுவர்
கண்டவின் பத்தைக் கனவினை யொக்கும்
கதியிலேன் உய்யுமா றருள்வாய்
வண்டமிழ் நாடாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 55

பாமுடல் மூன்றும் சீவனும் மாயா
பாசனும் பூதமோர் ஐந்தும்
ஏமுடன் இருபத் தெட்டுமே யென்றும்
என்னுரு வில்லெனத் தள்ளி
வீழுருச் சித்தாய் விமலமாய் இன்பாய்
வித்தையால் வீடளித் தென்னுள்
வாழுமோர் அமுதே மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 56

ஓதுமெய்ம் மறைகள் உயிர்க்கெலாம் நன்மை
யுகந்துசெய் தீமையை யகற்று
சேதுவாம் ஞானச் சேவடி போற்றிச்
செய்யென வனைத்துநான் அறிந்தும்
தீதுரு நன்மை செய்திலேன் உன்றன்
திருவடி போற்றிசெய் துய்யேன்
வாதொழித் தெனையாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 57

---

* குசகேது மகாராஜன் தவத்திற்கு மகிழ்ந்து
ரத்ன மழை பொழிந்த ஸ்தல வரலாறு.

சரணமுன் றீசன் சார்பெனல் மிருது
தமரெனன் மத்திமம் ஆகும்
திரமதாய் நானே சிவமெனல் அதிமாத்
திரமெனச் செப்புவர் மேலோர்
உரமதாய் நானே யுன்னுரு வென்றே
உணர்வொளி யின்பமாய் இலங்க
வரவுபோக் கொழித்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 58

பட்டினத் தடிகள் பார்துறந் தரசன்
பலருல கறித்தமென் றகற்ற
விட்டவர் போல மிகுபொருள் சேர்த்து
விருப்பினுற் கிளைஞருக் கீவர்
சிட்டமெய் யன்பர் செயலறிந் தீயும்
சிறப்பொடு பொருளெனக் கீவாய்
மட்டவிழ் மலர்சூழ் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 59

சுகர்முதல் அறிஞர் சுட்டபாத் திரம்போல்
சுகமுறத் தொடர்பெலாந் தொலைத்தார்
நிகரருஞ் சனகர் நிகரெனக் கூறி
நீணிலத் துறவெலாஞ் சேர்த்துத்
தகவறல் கண்டுந் தமியனேன் உய்யேன்
தயவினுற் றுறவுணர் வளித்தாள்
மகந்தவம் ஓங்கும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 60

கல்வியில் உயர்ந்தோன் கருவினில் உயர்ந்தோன்
கருத்தினில் உயர்ந்தவன் செருக்காம்
செல்வமுற் றுயர்ந்தோன் செயலினுல் உயர்ந்தோன்
சேவையால் உயர்ந்தவன் என்றல்

நல்வினை யருளால் நல்குமென் றறியா
நாயினேற் குணர்த்திநின் னருளால்
வல்வினை யொழித்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 61

கல்வியாம் கடலிற் பிழைத்துநான் மாணர்
கலவியாங் கடலினிற் பிழைத்துஞ்
செல்வமாங் கடலிற் செருக்கறப் பிழைத்தும்
சேய்விருப் பாங்கடற் பிழைத்தும்
நல்வினைப் பயனால் நானினி யுய்ய
நனவுறக் கனவுபோல் என்றே
வல்லிருள் அகற்று மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 62

தோற்றுல கனைத்தும் தோன்றிடும் மனத்தால்
தோன்றிடும் மனத்துரு நாடில்
ஆற்றுநீர் அலைபோல் அணியுருப் பொன்போல்
ஆம்வரன் தோழனே யென்ன
வேற்றுரு வின்றி விமலமாய் விளங்க
மெய்ப்பொருள் இன்பமாய்ச் சித்தாய்
மாற்றுவாய் மனத்தை மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 63

நானெனும் அகந்தை நசித்திடான் பிறப்பாம்
நரகதில் இடர்ப்படல் மீளான்
தானெனும் உணர்வாம் தத்துவம் மறந்து
தானலா வுடன்முதற் பொருளில்
ஊனெனும் உணர்வால் உணர்வுகெட் டொழிந்
உன்னருட் கடலிலே படிந்தால் [தோன்
வானென நிற்பன் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 64

வறையறக் கனவில் வருசுகத் துயர்கள்
வருகினும் நனவினில் உண்டோ!
நிரைகடற் குமிழி நுரைதிரை யாதி
நிகழினும் கடலின்வே றுண்டோ!
கரையிலாத் தொழில்கள் காணினும் நனவில்
கரியதாய்த் தென்றலுக் கசையா
வரையென அருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 65

விநாயகன் வேலன் வீரபத் திரனாய்
விளங்குமிம் மக்களில் யானும்
விநாவிடின் ஒருவன் விரைகழல் அடைந்தேன்
வீணனுக் குய்யுமா றிரங்கி
அநாதியாம் மாயை அவித்தையும் போனால்
அறிவினால் ஒன்றெனக் காட்டி
மநாதியைப் போக்கு மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 66

கற்றுணர்ந் துண்மை கண்டவர் நெஞ்சம்
கடலினிற் கரைந்தவுப் பொக்கும்
குற்றியிற் கள்வன் கானனீர் முயலின்
கொம்பெனக் கனவெனப் பொய்யாய்
உற்றவிவ் வுலகம் உணர்வுரு வென்றே
உன்னருட் கடலிலே படிந்தால்
மற்றுவே றுண்டோ மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 67

வாதவூர் அண்ணல் மணிமொழிக் குருகேன்
மாறன்வாய்த் திருமொழிக் குருகேன்
வேதமெய்ப் பொருளை விரித்திடும் மூவர்
மெய்த்தமிழ்க் குருகிடா வீணன்

மாதரின் மொழிக்கே மயலுறும் நாயேன்
மயலொழிந் துய்யுநாள் உளதோ
மாதவக் கொழுந்தே! மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 68

விலைமகள் மொழியே வேதமென் றவர்தம்
வீடதே முத்தியென் றெண்ணி
அலைமனத் தியல்பால் அலைந்தவர் ஓர்கால்
அருளினால் உய்ந்தனர் பலராம்
நிலைதெரிந் துய்யா நீசனோர் காலம்
நிலையுறல் அருளினால் உண்டோ
மலைமகாள் அருள்செய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 69

தத்துவ ராயர் தமிழ்த்துறைக் குய்யேன்
சங்கரர் அருளுரைக் குய்யேன்
முத்தியே யளிக்கும் மூவரே முதலாய்
முழக்கிய கீதைகண் டுய்யேன்
சுத்தநால் வேத வாக்கறிந் துய்யேன்
சுந்தரி நின்னருட் பெருக்கால்
வத்துவை யருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 70

தாண்டவ ராயர் தந்தகை வல்யந்
தனையறிந் துய்ந்திலன் இராமன்
வேண்டியே கேட்ட மெய்ப்பொருட் குய்யேன்
வேதமந் திரத்தினால் உய்யேன்
காண்டலால் எவர்க்கும் கண்ணெனுங் குறளைக்
கண்டறிந் துய்ந்திலன் அருனால்
மாண்டமெய்ப் பொருள்தா மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 71

மகிதலம் புரக்கும் மன்னரோ மாண்டார்
மணல்சிறி தெண்ணினும் தொலையாச்
சுகியென வாழும் சுரேந்திரர் உலகும்
தொலைந்தமீன் எண்ணினும் தொலையா
தகுமயன் அண்டம் தணந்தன பலவாம்
தான்றிலை யென்பவர்க் குரைப்பாய்
மகிடனை யழித்த மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 72

நகைசெயற் கிடமாய் நாச்சுவை கருதி
நாடுதோ றுமுன்றுடல் வளர்க்கும்
பகைமனம் ஒருக்கிப் பசித்துயர் போக்கப்
பழையவூண் ஏதுபெற் றிடினும்
மிகையெனக் கொண்டு மெய்த்தவம் இயற்றி
விரும்பியுன் னருள்பெறு வீணன்
வகையெனக் கருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 73

உலகெலாம் யானும் ஒன்றும்வே றில்லை
யொருவனே யென்றலோர் அகமாம்
நலமறும் உலகம் நானலன் இன்ப
ஞானமெய் யென்றலோர் அகமாம்
மலமற ஞானி மனத்தினில் இரண்டும்
மாசுகம் அளிக்கும்நீ யன்பால்
வலம்வர அருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 74

பானுந வொன்றே பலவெனல் சலத்தால்
பாலனே வலத்தினால் பலவாம்
வானுந வொன்றே மட்கடம் முதலாய்
வந்திடும் பேதமே போலாம்

நானுறும் பேதம் நன்குணர்ந் தவித்தை
நவிலரும் உபாதிபோய் ஞான
வானுறில் உண்டோ மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 75

சத்திய ஞானத் தனிப்பர முதலாய்ச்
சான்றதாய் அனைத்தினுள் நின்ற
சுத்தமாய் ஒன்ருய்ச் சுருதிகள் தேடிச்
சொல்லரும் மோனமே யுன்னை
அத்தன்மால் பிரமன் அறிந்திடார் எனில்யான்
அறிந்திடல் ஆகுமோ வென்னுள்
லத்துவாய் விளங்கும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 76

அறிவினுக் கறிவாய் அன்பினுக் கன்பாய்
அகிலமாய் அனைத்துயிர்க் குயிராய்ப்
பிறிவிலா வின்பப் பேருணர் வனந்தம்
பிறப்பிலாப் பேரொளி யாகிக்
குறியற நின்ற குணப்பெருங் குன்றே
குணமிலேன் பிறப்பிறப் பலைகள்
மறிவுற வெனையாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 77

மும்மைசேர் உலகில் மூவராற் றெழில்கள்
முதல்வநின் னருளலால் ஏது
இம்மையில் உலகில் எய்திடுஞ் செல்வம்
இறைவநின் னருளலால் ஏது
அம்மையிவ் வுலகில் ஆற்றுநற் கலைநின்
அருளலால் ஏதுநின் னருளால்
மம்மர்தீர்த் தெனையாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 78

கோளதாய்க் கோளின் குணமதாய் உயிர்கள்
கோருமெய்க் கோலமாய் வருநீ
நாளதாய் நாளின் நன்மையாய்த் தீதாய்
நரகமாய்ச் சுவர்க்கமாய் அன்பர்
ஆளதாய் அமரர்க் கமுதமாய் இன்பம்
ஆகுநின் பெருந்திற அருளால்
மாளவென் பிறப்பு மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 79

வேழமா வுருட்டும் விரிதிரைப் புனற்கா
வேரிபாய் விளைதரும் வயல்சூழ்
சோழநா டென்றும் சோறுடைத் தென்னும்
சொல்மொழிக் கிலக்கமாம் நகரோய்
வீழுதீ வினைகள் விருப்பற வுணர்வில்
விழித்துமெய் யின்பமாய் என்றும்
வாழநின் பதந்தா மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 80

பசித்தவர்க் கன்னம் பரிந்திடக் கூறை
பலர்தரப் பங்கயன் போற்றி
நசித்திடா துயர்ந்த நன்னகர் மாணூர்
நன்கிடும் மாவிளக் கொளியால்
நிசித்துயர் போக்கி நீடொளி பரப்பும்
நின்னகர்க் குய்ந்திட வடைந்தேன்
வசித்திடப் பதந்தா மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 81

மூலமொய்ப் பகுதி முக்குணம் ஈசன்
முழுதுயிர் உலகிலம் பூதம்
தூலமெய் ஆறுய்ச் சூட்சுமம் இருபான்
தோன்றிடும் அவித்தையாற் காண்பர்

காலமுன் றிறுநின் கண்ணவை யின்றிக்
காண்பவர் மறைப்பொருள் கண்டோர்!
மாலவன் தங்காய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 82

பராசரின் மைந்தன் பாரதம் வேதம்
பகுத்தமுக் காண்டசூத் திரங்கள்
புராணமீ ரொன்பான் புனைந்தநூல் பலவாம்
பூவினுக் களித்தனன் முன்னாள்
நராயணன் வடிவாய் நடித்தபேர் அருளால்
நாரணி புராந்தகி யமலை
வராகிவந் தருள்தா மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 83

விண்முதற் பூதம் விளங்குமோர் ஐந்தும்
விதுகதிர் சீவனாய் மூர்த்தம்
எண்வகை யாகி யிருவினைக் கயிற்றால்
இறைவிநீ! யியக்குவிப் பவள்நீ!
உண்வகை நான்காய் ஊட்டுவிப் பவள்நீ
உணர்வளித் துறங்குவிப் பவள்நீ
மண்மிசை எனையாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 84

சுருதிகள் அனைத்தும் தொழிலற விருத்தல்
சுகமெனச் சாற்றுதல் கண்டும்
திருவருட் குருவால் தீதற வுணர்ந்தும்
தீஞ்சுவை யுளத்துறக் கண்டும்
கருதியென் னெஞ்சம் கலங்குவ தென்னோ
கருணையால் இரங்கிநீ யென்றன்
வரும்விதி மாற்றாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 85

உள்ளமாம் வெளியில் உணர்வெனுங் கதிரோன்
உதித்திட வவித்தையாம் இருள்போய்
கள்ளராங் காமர் கலகராஞ் சமயர்
கரந்திடக் காவலாம் மறைகள்
மெள்ளவே தூங்க மனமதி மழுங்க
மேவிடா புலன்களாம் மீன்கள்
வள்ளனின் னருள்தா மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 86

பொன்றுமித் தூலம் இறைவிநின் னடிமை
புணரியேழ் துளியெனச் சீவன்
என்றுநின் னஞ்சன் இருவித வுபாதி
இன்றெனில் என்னுரு நீயாம்
ஒன்றென வுபாதி யொழித்துணர் வளித்தென்
னுருவுநீ யுன்னுரு நானாய்
வன்றுயர் தீர்த்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 87

அன்னமாங் கோசம் அகற்றிடப் பிராணன்
அகற்றிட மனோமயன் அகல
துன்னுவிஞ் ஞான மயனகன் றிடவும்
தோற்றுமா னந்தமும் அகற்றில்
என்னுரு நீயாய் ஏகமாய் முதலாய்
இன்பமெய்ஞ் ஞானமாய் என்றும்
மன்னுவ தருள்வாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 88

காமமே யுற்றோர் கடுஞ்சினம் உற்றோர்
கைப்பொருளு லோபமே யுற்றோர்
தாமவர்க் கொன்றே தருநர கெனமுன்
தனஞ்சயர்க் குரைத்தனை மாலாய்

நாமமே நோயேல் நாயினேன் மூன்றால்
நலிவனேல் உய்வனோ தீர்த்தாள்
மாமறை முழங்கும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 89

எங்குமாம் உன்னை யிருப்பதோர் தேசம்
என்றுநான் திரிந்ததைப் பொறுப்பாய்
துங்கநான் மறைகள் தொடர்ந்திடா வுன்னைச்
சொல்லநான் துணிந்ததைப் பொறுப்பாய்
கங்குலும் பகலும் கடந்தநின் வடிவைக்
கருதநான் துணிந்ததைப் பொறுப்பாய்
மங்குல்தோய் மதில்சூழ் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 90

வான்மதி யுண்டு மகிழ்ந்துமண் தோயா
வானுறும் நிலாமுகி யென்ன
ஊன்மறந் தின்ப வுணர்வெனும் அமுதை
உண்டுளம் மகிழ்ந்தினி திருக்க
நான்மதித் தேங்கல் நனியறிந் தருளை
நல்கில யென்னிலென் செய்வேன்
வான்பெருங் கருணை மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 91

சுத்தமாம் பொன்னே சுடரிழை யுருப்போல்
சூழ்கடம் மண்ணதே போலும்
சத்தொரு மூன்றாய்ச் சித்தொரு நான்காய்
சார்ந்தவின் பெண்வகை யாகி
நித்தமாய் நிறைவாய் நிற்குநின் னுருவை
நினைவற நினைத்துணர் வடைந்துன்
மத்தனாய் அருள்வை மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 92

அனையுன் துருவே யனைத்துநான் நடத்தல்
அன்பினுல் வலம்வரல் ஆகும்
வினையெலாம் தொழும்பாம் வினைவுநின் அன்பாம்
விரைகமழ் பூசைசெய் புலனும்
நினைவெலாம் தியானம் நித்திரை சமாதி
நின்னருட் கடலிலே படிந்து
மனையெலாம் அமுதாம் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 93

ஆதரம் ஆறும் அவத்தையோர் ஐந்தும்
அட்டமா யோகமும் கடந்து
நாதமும் விந்தும் ஞானமு ஞேயம்
நழுவிய நற்பதப் பொருளே
போதமே யின்பப் போகமே யுன்ருட்
போதுறும் எனக்குணர் வளித்தாள்
மாதவர் போற்றும் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 94

ஊட்டியை யரிந்தும் உணர்ந்தவர் வாரா
உண்மையை யுணர்ந்துமெய் யன்பர்
நாட்டமுற் றிருத்தல் நாதரில் என்றே
நன்மையென் றுணர்ந்திடும் நலமோ
கேட்டுமென் றுயரம் கௌரிநீ யிரங்காய்
கேவலம் உய்ந்திலன் உலகில்
வாட்டுதல் அழகோ மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 95

கதிர்மதி மின்னல் கனலுடு சீவன்
கண்மனம் சோதியென் வகையாய்
அதினொளி யாகி யறிந்தவர்க் கறிவாய்க்
அடங்கிய யோகியர்க் கின்பாய்க்

கதியெனக் கருதும் கருத்தினில் மதியாய்க்
கருதிடார் விதியதாம் நீதான்
மதியெனக் கருள்வை மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 96

நின்னொளி முகமோ நிறைமதி யாகும்
நீடுடல் மரகதக் கொழுந்தாம்
உன்னுளங் கருணை யுததியாம் மூன்றல்
உடல்நடுக் கறவுளம் புகுந்தால்
என்னுளத் தாப வெரியினல் நீங்கும்
இறைவிநீ யிரங்கிவந் தருள்வாய்!
மன்னுயிர்த் துணையாம் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 97

மூவுல குயிர்கள் முயன்றுன தருளால்
முற்றுருப் பொருளுமொன் றுண்டோ
கூவுவான் இச்சை குறைவற நீக்கிக்
குவலயத் தருளிலை யென்னில்
மூவுல கருள முற்படல் உண்டோ
முதல்விநின் திருவருட் டுணையால்
மாவுணர் வளித்தாள் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 98

கனவினிற் றேன்றிக் கணத்தினில் மறைந்தாய்
கண்டயான் கண்ணினீர் சோர
நனவினில் ஏங்கி நலிவதை நோக்கி
நாயினேற் கிரங்கில யின்னும்
மனவிருப் படங்க மலரடி காட்டி
மகிழ்வதோர் நாளெனக் குண்டோ
மனமகிழ்ந் துரைப்பாய் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 99

எத்தகைப் பிறப்பில் ஏழைவந் துறினும்
ஏந்திழை மயலொழித் திடுவாய்
அத்தன்மால் பேதம் அறிந்திடா அறிவும்
அன்பர்தஞ் சேவையும் அறமும்
வித்தையென் னெஞ்சை விலகிடாத் திறமும்
விரத்தியும் அன்புநீ யருள்வாய்
வத்துவாய் உயிராம் மருகல்வாழ் அரசே!
வண்டுவார் குழலியெந் தாயே! 100

நூற்பயன்.

மாலையொரு நூறும் வகுத்துரைத்த மெய்ப்பொருளும்
வாலைவண்டு வார்குழலி வாக்காகும் – மாலைதனைக்
கண்டுணர்ந்து பாடக் கதிபெறுவார் இம்மையிலும்
உண்டவர்க்கே யின்பம் உகந்து. 1

வண்டுவார் குழலியம்மை
தோத்திரப் பாமாலை
முற்றுப்பெற்றது.



திருமருகல். பஞ்சமூர்த்தி துதி.

இரவியா யிலங்கும் ஈசனைங் கரனை
யென்னுளந் தின்பமாங் குகனை
பரவினோர்க் கெல்லாப் பலனருள் மருகற்
பரமனு மணிவணன் றன்னை
வருவினை மாற்றி வல்லிருள் அகற்றும்
வண்டுவார் குழலியெந் தாயை
பரவுவெம் பவநோய்ப் பற்றறப் பொன்னம்
பலவனைப் பணிந்துநாம் வாழ்வாம். 1

பரம குருநாதன் துதி.

இருக்கொடு நான்கு மறைகளுக் கெட்டா
வின்பமா யிலங்குமெய்ஞ் ஞான
அருக்கனு யன்ப ரகத்திரு ளகற்றும்
அண்ணலே யகிலனு யகனே
பரிக்குநின் னருளாற் பவக்கடல் கடந்து
பாவியேன் உய்யுமா றிரங்கித்
திருக்களர் உறையுஞ் செல்வமே வீர
ஞானதே சிகசிகா மணியே 2

ஏகமே நோக்கி யின்புற வறியா
தென்மனம் புலன்களில் மயங்கி
ஆகமே தானென் றகிலமே மெய்யென்
றலைந்திடா தடியனேற் கிரங்கி
மோகமே மாற்றி முற்றுணர் வளித்தாள்
முதல்வநற் றிருக்களர் அமுதே
நாகமே புகழும் நாதனே வீர
ஞானதே சிகசிகா மணியே 3

சற்குருநாதன் துதி.

அருளொளி யென்னை யாள்வதற் கிரங்கி
யாகமோ டித்தல மருவி
மருளுமென் மனத்தின் மயலொழித் தென்றும்
மாபெரும் பிரமமே நீயென்
றிருள்கெடுத் தென்னை யின்பமே யாக்கி
யிணையிலா னந்தவாழ் வளித்த
அருளுரு வாம்பொன் னம்பலக் குருவை
யனுதினம் வணங்கிவாழ்த் திடுவாம் 4

சுருதிமுதற் பலகலையுந் தேடிக் காணு
சுரருடனே மூவர்களுஞ் சொல்ல வொண்ணு
பரிதிமுதல் ஒளிக்கெல்லாம் ஒளியே யாகி
பராபரமாம் அத்தனைக்கும் பரமே யாகி
கருதியுணர் வார்க்கின்பக் கடலே யாகி
கருதாதான் உருவாயென் கருத்தி னிற்கும்
அருளுருபொன் னம்பலவன் அத்வைத னுவந்
தாண்டுகொண்ட வடிக்கமலம் அணைந்து
[வாழ்வாம் 5

அனுபவ நிலை.

நினைவே யுலகாக்கி நீள்பந்த மாக்கும்
பினையதற்கு நல்மருந்து பேசில் – எனையொழிய
எங்குமே வேறில்லை யென்றநிலை மாருதேல்
தங்குமோ பந்தம் தரித்து. 6

திருப்போரூர் சந்நிதிமுறை.

நோயிற் கிடவாமல் நொந்துமனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன் – காயத்தை
யோர்நொடியில் நீக்கி யொண்போரூர் அய்யாநீ
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து 7

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
1	2	எழுவகை	எழுவகைத்
	4	ஆரறிவு	ஆறறிவு
		ஆரறிவுள்ள	ஆறறிவுள்ள
	6	தனுதிகளைதேடி	தனுதிகளைத்தேடி
	18	ஈசுவரனை தாய்	ஈசுவரனைத்தாய்
௨	4	எழுதிபடிக்க	எழுதிப்படிக்க
4	8	சீர்கழி	சீர்க்கழி
	12	செழிஇய	செழீஇய
5	20	புகளி	புகலி
6	4	மனைவியுந்	மனைவியுஞ்
12	13	லகிரி	லகரி
	4	உறைப்பேன்	உரைப்பேன்
	5	உனர்ந்	உணர்ந்
17	17	யாழினுந்	யானினுந்
18	11	சிதைந்யு	சிதைந்தயு
19	9	யினைகழல்	யிணைகழல்
20	4	சாந்து	சார்ந்து



நாகூர் - ஸ்ரீ சாஸ்தா பவர் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.